27 வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றம்

சைதாப்பேட்டை, சென்னை

முன்னிலை – திரு.எஸ். பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,

27 வது பெருநகர குற்றவியல் நடுவர்.

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 25 ம் நாள் புதன்கிழமை

Crl.M.P.No.47/2026

In

CC.No.5995/2018

1. Y.K.மோகன்ராவ்,
2. Y.S.லட்சுமி,
3. Y. ஆனந்த்
4. Y. நாகராஜேஷ் .....மனுதாரர்கள்/புகார்தாரர்கள்

\\ எதிர்\\

திரு.ஜே.என்.ஜெகத்ராம்ஜி என்கிற ஜே.என்.ராம்ஜி ....எதிர்மனுதாரர்/எதிரி

*****

இம்மனுவானது 16.03.2026 ம் தேதியன்று விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள்/புகார்தாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எம்.ஆரோக்கியராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் Mr.Sree Narain Jha அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுறை கேட்கப்பட்டும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர்கள்/புகார்தாரர்கள் தரப்பில் புதசா.1 ன் சாட்சியத்தை நீக்கறவு செய்ய கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம்–**

இவ்வழக்கின் முந்தைய புகார்தாரரான Y.K.மோகன்ராவின் அதிகார முகவர் ஆர்.ஜெய்சங்கர் என்பவர் புதசா.1 ஆக விசாரிக்கப்பட்டார். இந்நிலையில் 28.03.2024 ல் Y.K.மோகன்ராவ் இறந்துவிட்டதால் அந்த அதிகார பத்திரம் செல்லாதது ஆகும். மேலும்

மேற்படி புதசா.1 ஐ எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. ஆகவே புதசா.1ன் சாட்சியத்தை நீக்கறவு செய்து அவர் மூலம் குறியீடு செய்யப்பட்ட புதசாஆ.1 முதல் 11 வரையிலான சான்றாவணங்களை புதசா.2ன்மூலம் குறியீடு செய்ய வேண்டியுள்ளது. எனவே புதசா.1 ஜெய்சங்கரின் சாட்சியத்தை நீக்கறவு செய்து அவர் மூலம் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்களை புதசா.2ன் மூலம் குறியீடு செய்ய அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர் உறையின் சுருக்கம்–**

முந்தைய புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் குறித்து தனிப்பட்ட முறையில் புதசா.1க்கு தெரியும். அவர் முந்தைய புகார்தாரருக்காக சமாதான ஒப்பந்தத்தை எழுதிக்கொடுதுள்ளார். ஆகவே அவரை விசாரிக்க எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் முதல்வர் இறந்துவிட்டால் முகவரை விசாரிக்க எவ்வித சட்ட தடையும் இல்லை. ஆகவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

**3. பிரச்சனை**

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே பிரச்சனை ஆகும்.

**4. பிரச்சனைக்கான தீர்வு**

I. (a) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் ஆரம்பத்தில் Y.K.மோகன்ராவ் இவ்வழக்கை தன்னுடைய அதிகார முகவர் ஆர்.ஜெய்சங்கர் மூலம் தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. அதன் பிறகு அவர் இறந்துவிட்டதால் அவருடைய வாரிசுகள் தற்போது இவ்வழக்கை நடத்தி வருவதும் தெரியவருகிறது. மேற்படி Y.K.மோகன்ராவ் அவர்கள் எதிர்மனுதாரர்/எதிரிக்கு எதிராக மாற்று முறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138ன் கீழ் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதும் தெரியவருகிறது.

(b) எதிர்மனுதாரர்/எதிரி கூறுவது போல் 03.09.2022 ல் சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதா என்பதை பரிசீலனை செய்ததில் எதிரியை கடந்த 26.10.2023 ல் அதாவது அந்த ஒப்பந்தம் ஏற்பட்டதாக கூறுவதிலிருந்து 13 மாதங்கள் கழித்து குவிமுச பிரிவு 251ன் கீழ் வினவிய போது 03.09.2022 தேதியிட்ட சமாதான ஒப்பந்தம் உள்ளதாக கூறவில்லை. அதே போல் கடந்த 28.07.2025 ம் தேதி குவிமுச பிரிவு 313(1)(b)ன் கீழ் வினவிய போதும் மேற்கண்ட சமாதான ஒப்பந்தம் உள்ளதாக கூறவில்லை.

(c) புகார்தாரர் தரப்பில் புதசா.2 ஆக நாகராஜேஷ் கடந்த 14.10.2024 ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. புதசா.2 ஐ எதிரி தரப்பில் கடந்த 19.10.2024, 28.10.2024, 13.03.2025, 23.07.2025 ஆகிய தேதிகளில் விரிவாக குறுக்கு விசாரணை செய்த போதும், அதற்கு பல வருடங்களுக்கு முன்பு ஏற்பட்டதாக கூறும் 03.09.2022 சமாதான ஒப்பந்தத்தை குறித்து ஒரு கேள்வி கூட எழுப்பப்படவில்லை.

(d) இந்நிலையில் புகார்தாரர் தரப்பில் காசோலை தொகைகளை வசூல் செய்து தர கோரி எதிரிக்கு எதிராக சிஎஸ் எண்.418/2018 ஐ மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து 30.09.2022 ம் தேதி தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. அந்த தீர்ப்பு பிறப்பிதற்கு முன்பு 03.09.2022 லிலேயே சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டதாக கூறும் நிலையில், மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் அந்த ஒப்பந்தத்தை முன்னிலைப்படுத்தவில்லை.

(e) மாண்புமிகு உயர் நீதிமன்றம் 30.09.2022 ல் தீர்ப்பு வழங்கியதற்கு எதிராக மனுதாரர்/எதிரி O.S.A(CAD) No.30/2023 ல் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. ஆனால் அப்போதும் கூட அதற்கு முன்தாக ஏற்படுத்தப்பட்டதாக கூறும் 03.09.2022 சமாதான ஒப்பந்தத்தை குறித்து கூறவில்லை.

(f) எதிரியை குவிமுச பிரிவு 251, 313(1)(பி)ன் கீழ் வினவிய போதும், புதசா.2 ஐ குறுக்கு விசாரணை செய்த போதும், மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற

வழக்கு மற்றும் மேல்முறையீட்டிலும் சமாதான ஒப்பந்தத்தை குறித்து கூறாத நிலையில், இவ்வழக்கானது தீர்ப்பிற்கு போடப்பட்ட நாள் அன்று பல வருடங்களுக்கு முன்பு சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டதாக கூறி இம்மனுவை தாக்கல் செய்ததிலிருந்தே சமாதான ஒப்பந்ததில் உண்மை தன்மை இல்லை என்பது தெரியவருகிறது.

II. இவ்வழக்கில் முந்தைய புகார்தாரரான Y.K.மோகன்ராவின் பொது அதிகார முகவரான ஆர்.ஜெய்சங்கர் 28.011.2023ம் தேதி வழக்கு தாக்கல் செய்த போது கொடுத்த பிரமாண வாக்குமூலத்தை முதல் விசாரணை ஏற்றுக்கொண்டுள்ளது தெரியவருகிறது. அதன் படிக்கு ஆர்.ஜெய்சங்கர் புதசா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதன் பிறகு மனுதாரர்/எதிரி தரப்பில் CrlMP.No.20614/2023 மனு தாக்கல் செய்யப்பட்டு 14.12.2023ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. ஆனால் அதன் பின்னிட்ட வாய்தாக்களான 22.01.2024ல் புதசா.1 ஆஜரான போதும், அவரை குறுக்கு விசாரணை செய்யாதது தெரியவருகிறது. அதன் பிறகு கடந்த 28.03.2024ல் இறந்துள்ளது தெரியவருகிறது. மேற்படி மோகன் ராவ் 28.03.2024ல் இறந்துவிட்டதால் அவர் ஆர்.ஜெய்சங்கருக்கு கொடுத்த அதிகார பத்திரம் இல்லாநிலையது ஆகும். ஆகவே புதசா.1க்கு கொடுக்கப்பட்ட அதிகாரம் செயல்பாட்டில் இல்லை என்பதாலும், குறுக்கு விசாரணை செய்யப்படாத மற்றும் முகவரான புதசா.1ன் சாட்சியத்தை நீக்கறவு செய்ய வேண்டும் என மனுதாரர்கள்/புகார்தாரர்கள் கோருவது ஏற்புடையது எனவும், இம்மனு அனுமதிக்கதக்கது எனவும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

//என்னால் சொல்லப்பட்டதை சுருக்கெழுத்து தட்டச்சர் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் புதன்கிழமை 25ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.//

PRINCE SAMUVEL RAJ

Digitally signed by PRINCE SAMUVEL RAJ
Date: 2026.03.25 18:35:29 +0000

27 வது பெருநகர குற்றவியல் நடுவர்,
சைதாப்பேட்டை, சென்னை–15.